ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சேலம் மாவட்டம்.

## தலைவாசல் ஊராட்சி ஒன்றியம்

## ஒன்றிய தரப்பு அலுவலக உதவியாளர் பதவிக்கான அறிவிக்கை (Notification).

ந.க.எண்.85/2019/அ1 நாள்:10.03.2020.

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தரப்பில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து அரசு வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 30.03.2020 அன்று பிற்பகல் 05.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | : | அலுவலக உதவியாளர் |
| 2. | சம்பளம் | : | ரூ.15700 – 50000 (நிலை 1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் இதர படிகளுடன். |
| 3. | வயது | : | 01.07.2019 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். |

| வகுப்பு | 01.07.2019 அன்று அதிகபட்ச வயது |
|---|---|
| ஆதி திராவிடர் / பழங்குடியினர் | 35 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர், பிற்படுத்தப்பட்டோர் | 32 |
| பொதுப் பிரிவினர் | 30 |

| | | | |
|---|---|---|---|
| 4. | மொத்த பணியிடங்கள் | : | 1 |

**5) இன சுழற்சி மற்றும் இடஒதுக்கீடு விபரம் :–**

| வ. எண் | இனசுழற்சி விபரம் | இட ஒதுக்கீடு | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பொதுப்போட்டி | – | 1 |

| | | | |
|---|---|---|---|
| 2. | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | : | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மிதி வண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். |
| 3. | விண்ணப்ப படிவம் | : | இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை www.salem.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 4. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள் | : | 30.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை |

## நிபந்தனைகள்

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை www.salem.nic.in என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல்களுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 30.03.2020 அன்று பிற்பகல் 5.45 மணி வரை தலைவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் உள்ளவாறு விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
5. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.
7. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்
தலைவாசல்.

6/3/2020

6/3/2020

## ஊராட்சி ஒன்றியம், தலைவாசல்
## அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்பபடிவம்.

கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | ஆண்/பெண் | |
| 3. | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | |
| 4. | பிறந்த தேதி/ வயது | நாள் மாதம் வருடம்<br>☐☐☐☐☐☐☐☐<br>-------------வயது |
| 5. | கல்வித் தகுதி | |
| 6. | முகவரி | |
| 7. | சொந்த மாவட்டம் | |
| 8. | தொலைபேசி மற்றும் கைபேசி எண் | |
| 9. | மதம் | |
| 10. | வகுப்பு / பிரிவு | |

- விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்.
- தேர்வுக்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு என அறிய வரும் பட்சத்தில் என் மீது எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுகிறேன்.
- என்மீது குற்றவியல் வழக்கு ஏதும் பதியப்படவில்லை என உறுதி அளிக்கிறேன்.

இடம் :

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்

குறிப்பு- கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று ஆகியவற்றிற்கான சுய சான்றொப்பம் இடப்பட்ட சான்று நகல்கள் விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். அசல் சான்றிதழ்கள் நேர்காணலின் போது சமர்ப்பிக்க வேண்டும்.